DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register                    Case No. C.C. 27 of 2017  PW: 5

Sessions

|  |  |
|---|---|
|  | Prosecution |
| Deposition of witness for | Defence |
|  | Court |

Name : வேலு

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18/10/2021.

**தேதி..18.10.2021, C.C. 27/2017, அ.த.சா.5 வேலு அவர்களின் முதல் விசாரணை...**

நான் பத்மாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வெல்டிங் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். 23.08.2015 அன்று 02.30 மணியளவில் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. லாரி ஓட்டுநர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். நான் லாரியை பிடித்து அதிலிருந்து சாவியை எடுத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் வெல்டிங் ஷாப்பில் வேலை செய்வதால் எந்த நேரமும் எனக்கு வேலை இருக்கும் என்றால் சரிதான். என் கடைக்கு எதிராக சாலை உள்ளது. இடதுபக்கமாக விபத்து நடந்தது என்று எனது வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் 02.30 மணி. விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது எனது கடையில் என்னுடன் சேர்த்து மூன்று நபர்கள் இருந்தார்கள். சம்பவயிடத்திற்கும் எனது கடைக்கும் 15 அடி தூரம் இருக்கும். அந்த சாலையில் வாகனங்கள் அதிகமாக செல்லும் என்றால் சரிதான். வாகனத்தின் சப்தம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தை ஏற்பட்டுத்திய ஓட்டுநரை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண், நிறம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.